**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 07.12.2025                    நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள் ()*

கொடிநாளை ஒட்டி, நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த வீரர்களுக்கு இன்று தலைவர்கள் தங்களது வீர வணக்கத்தை செலுத்தி உள்ளனர்.

ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் 2025, நாளை மற்றும் நாளை மறுநாள் இந்தியா முழுவதும் நடைபெறுகிறது.

வந்தே மாதரம் தேசப்பாடலின் 150 ஆவது ஆண்டு கொண்டாட்டங்கள் தொடர்பான விவாதம் மக்களவையில் நாளை நடைபெறுகிறது.

ரஷ்ய அதிபர் திரு புடினின் இந்திய வருகை அமெரிக்கா உடனான வர்த்தக பேச்சுவார்த்தையை பாதிக்காது என்று வெளியுறவுத் துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

*கொடி நாள் 1 (5)*

முப்படை வீரர்களின் தியாகத்தை போற்றும் வகையில், கொடிநாள் இன்று கடைபிடிக்கப்படுகிறது. இந்நாளை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி, பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர்

நாட்டுக்காக தியாகம் செய்த வீரர்களுக்கு, தங்களது வீர வணக்கத்தை செலுத்தி உள்ளனர். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு......

**(வாய்ஸ் )**

கொடி நாள் 2 (17)

**(வாய்ஸ் )**

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள செய்தியில், உறுதியான தைரியத்துடன், நாட்டுக்காக தனது இன்னுயிரை தியாகம் செய்த வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை இந்நாளில் வணங்குவதாக பதிவிட்டுள்ளார். ராணுவ ஒழுக்கத்துடன் மக்களை காக்க வேண்டும் என்ற சிந்தனையோடு, போராடி, நாட்டை வலுப்பெற செய்த வீரர்களை இந்நாளில் நினைவு கூர்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். வீரர்களின் ஒழுக்கமும், தியாகமும் அவர்களின் கடமை உணர்ச்சிக்கு முன்னுதாரணமாக திகழ்கிறது என கூறியுள்ள பிரதமர், கொடி நாள் நிதிக்கு மக்கள் தாராளமாக நிதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். முப்படையினரின் கொடி நாளை ஒட்டி, இந்திய வீரர்களின் வீரத்தையும், தியாகத்தையும் போற்றுவதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், முப்படை வீரர்களின் தன்னலமற்ற சேவையால் நாடும், நாட்டு மக்களும்

பாதுகாக்கப்படுவதாக கூறியுள்ளார். அவர்களின் சேவையும், தியாகமும், ஈடு செய்ய முடியாதது என்று கூறியுள்ளார். கொடி நாளுக்கு பொதுமக்கள் மனமுவந்து தாராளமாக நிதி அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். நாட்டு மக்கள் அளிக்கும் கொடிநாள் நிதி வீரர்களின்

கொடி நாள் 3 (9)

அர்ப்பணிப்பை கவுரவிப்பதாகவும், மேலும், அவர்கள் வலிமையோடு செயல்பட உதவிடும் என்றும் கூறியுள்ளார். கொடி நாளை ஒட்டி, முப்படைகளில் பணியாற்றி வரும் அனைத்து வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு, முப்படை தளபதி ஜெனரல் அனில் சவுகான் தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். நாட்டின் பாதுகாப்பிற்கு எப்போதும் தயார் நிலையில் இருக்கும் வீரர்களின் ஒப்பற்ற சேவையை பாராட்டுவதாக கூறியுள்ளார். தளராத உறுதிப்பாட்டுடனும், வீரத்துடனும் போராடி, இன்னுயிரையும் தியாகம் செய்த வீரர்கள், கடற்படை மாலுமிகள் மற்றும் விமானப்படை வீரர்கள் உள்ளிட்டோரை இந்நாளில் அவர் நினைவு கூர்ந்துள்ளார்.

ஹேக்கத்தான்-புதுச்சேரி (12)

கல்வி அமைச்சகத்தின் புத்தாக்க பிரிவு மற்றும் அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் ஏற்பாடு செய்துள்ள நாட்டின் மிகப்பெரிய மாணவர் கண்டுபிடிப்பு முயற்சிகளில் ஒன்றான ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் 2025, நாளை மற்றும் நாளை மறுநாள் இந்தியா முழுவதும் நடைபெறுகிறது. புதுச்சேரி அரியூரில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் இந்நிகழ்ச்சியின் இறுதி சுற்றில் மென்பொருள் பதிப்பை நடத்துகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளை சேர்ந்தவர்கள் இதில் பங்கேற்கின்றனர். இதுகுறித்து, ஆகாஷ்வாணியிடம் பேசிய ஸ்ரீ வெங்கடேஸ்வரா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் எஸ். பிரதீப் தேவநேயன், இந்தியா முழுவதிலுமிருந்து பங்கேற்பாளர்கள் இந்த இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளப்போவதாக கூறினார்.

நாடாளுமன்றம் (7)

வந்தே மாதரம் தேசப்பாடலின் 150 ஆவது ஆண்டு கொண்டாட்டங்கள் தொடர்பான விவாதம் மக்களவையில் நாளை நடைபெறும் என நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடி நண்பகல் 12 மணிக்கு இந்த விவாதத்தை தொடக்கி வைக்கிறார். முன்னதாக, மக்களவை தலைவர் திரு ஓம்பிர்லா தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில் இதற்கான முடிவு எட்டப்பட்ட நிலையில் நாளை இந்த சிறப்பு விவாதம் இடம் பெறுகிறது.

ஜெய்சங்கர் (11)

அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் இந்திய தொழிலாளர்கள், விவசாயிகள், மற்றும் சிறு-குறு வர்த்தகர்களின் நலன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் வரும் புதன் கிழமை இருதரப்பு வர்த்தக பேச்சுவார்த்தைகள் தொடங்க உள்ள நிலையில், இந்திய பொருட்களுக்கு அமெரிக்காவின் 50 சதவிகித வரி விதிப்பை குறைப்பது தொடர்பான

விரிவான ஆலோசனைகள் இதில் மேற்கொள்ளப்படும் என தெரிகிறது. முன்னதாக, செய்தியாளர்களிடம் பேசிய அவர், ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புடினின் இந்திய வருகை அமெரிக்கா உடனான வர்த்தக பேச்சுவார்த்தையை பாதிக்காது என தெளிவுப்படுத்தினார்.

இண்டிகோ (17)

இண்டிகோ விமான சேவை பாதிக்கப்பட்டது குறித்து அந்நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி திரு பீட்டர் எல்பார்ஸ் மற்றும் மேலாளர் திரு இசிட்ரோ ஆகியோர் 24 மணி நேரத்திற்குள் விளக்கம் அளிக்க வேண்டும் என்று சிவில் விமான போக்குவரத்து இயக்குனரகம் உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக அனுப்பப்பட்டுள்ள நோட்டீசில், விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால் பயணிகள் பெருமளவு இன்னலுக்கு உள்ளாகி இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால், மாற்று ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளாததற்கான காரணத்தையும் வினவியுள்ளது. முறையான திட்டமிடல் இல்லாத காரணத்தால் தான் பெருமளவில் விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சிவில் விமான போக்குவரத்து இயக்குநரகம் தெரிவித்துள்ளது. முன்னதாக, மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை

அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு, தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட ஆலோசனை கூட்டத்தில், பயணிகளுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள், இடையூறுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டதை அடுத்து, ரயில்வே நிர்வாகம் நாடு முழுவதும் 89 சிறப்பு ரயில்களை நாளை வரை இயக்குகிறது.

கோவா 1 (17)

கோவா உணவக தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 25 ஆக அதிகரித்துள்ளது. குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி இராதாகிருஷ்ணன் பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோர் இச்சம்பவத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசு தலைவர் வெளியிட்டுள்ள செய்தியில், தீ விபத்தில் தங்களது குடும்ப உறுப்பினர்களை இழந்து வாடும் உறவினர்கள் இந்த இக்கட்டான தருணத்திலும் நம்பிக்கையோடு செயல்பட வேண்டும் என கூறியுள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் திரு சி பி இராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், இந்த தீ விபத்து தனக்கு மிகுந்த வருத்த த்தை அளித்திருப்பதாக கூறியுள்ளார். தீ விபத்தல் உயிரிழந்தவர்களின் ஆன்மா சாந்தியடைய பிராத்தனை செய்வதாகவும், அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு தனது ஆறுதலை

தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார். காயமடைந்தோர் விரைந்து நலம் பெற இறைவனை தாம் வேண்டுவதாகவும் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், இந்த சம்பவம் தனக்கு ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தி உள்ளதாக தெரிவித்துள்ளார். இந்த சம்பவத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்களை

கோவா 2 (4)

தெரிவித்துள்ள அவர், காயமடைந்தவர்கள் விரைந்து நலம் பெற தாம் பிராத்திப்பதாக பதிவிட்டுள்ளார். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து தலா 2 லட்ச ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

*அமித் ஷா* (6)

உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று குஜராத் மாநிலம் அகமதாபாத்தில்  ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி திட்டங்களை தொடங்கி வைக்கிறார். வீட்டு வசதி, உள் கட்டமைப்பு, பொது சுகாதார வசதி போன்ற திட்டங்களை அவர் இன்று தொடங்கி

வைக்க உள்ளார். அம்மாநில முதலமைச்சர் திரு பூபேந்தர் பட்டேலும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்.

*ராஜ்நாத் சிங்* (13)

மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று 7 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களில் எல்லை சாலைகள் அமைப்பால் கட்டப்பட்ட ஷியோக் சுரங்கப்பாதை உட்பட 125 முக்கியத்துவம் வாய்ந்த உள்கட்டமைப்பு திட்டங்களை தொடக்கி வைத்தார். தொடக்க விழாவில் உரையாற்றிய அவர், இந்த உள்கட்டமைப்பு திட்டங்கள் இந்திய ராணுவ மற்றும் தேசத்திற்காக தங்கள் உயிரை தியாகம் செய்த வீரர்களின் தியாகங்களை நினைவு கூர்வதற்கு அர்ப்பணிக்கப்பட்டது என்று கூறினார். லே-வில் உள்ள ஷியோக் சுரங்கப்பாதை லடாக்கில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும், கடுமையான குளிர் காலத்தில் அனைத்து விதமான போக்குவரத்து இயக்கத்தையும் வழங்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்த சுரங்கப்பாதை பிராந்தியத்தின் வளர்ச்சி, சுற்றுலா மற்றும் பொருளாதார நடவடிக்கையை ஊக்குவிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வானிலை (5)

தென்மேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால், தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

விளையாட்டு (5)

தென்னாப்பிரிக்காவின் கேப்டவுன் நகரில் இந்தியா-தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையிலான ஹாக்கி போட்டிகள் இன்று தொடங்குகிறது. 3 போட்டிகள் கொண்ட இந்த தொடரின் முதல் போட்டி இன்றிரவு 8.30 மணிக்கு தொடங்குகிறது. எஞ்சிய இரண்டு போட்டிகள் வரும் செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் நடைபெற உள்ளது,

S-I-R (6)

புதுச்சேரியில் கடந்த மாதம் 4 ஆம் தேதி தொடங்கிய எஸ்ஐஆர் எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் வரும் 11 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. சிறப்பு தீவிர திருத்தப் பணி

விண்ணப்பம் பூர்த்தி செய்த அனுபவம் குறித்து எமது செய்தியாளரிடம் திலாசுப்பேட்டை வாக்காளர் திரு கலியபெருமாள் மற்றும், ஆனந்தாநகரை சேர்ந்த வாக்காளர் திருமதி ஹேமலதா ஆகியோர் கூறுகையில்........

**(வாய்ஸ்- கலியபெருமாள் - ஹேமலதா)**